ஸ்ரீ

நிர்மலா

அல்லது

ஒரு பத்திராசிரியரின் விடுமுறை.

இது

ஸ்ரீ பிரபாத குமார முகோபாத்தியாயரால்

பெங்காளிபாஷையில் எழுதப்பெற்று,

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம், ஸ்ரீவிவேகாநந்த விஜயம்

முதலிய நூல்களின் ஆசிரியராகிய

மஹேச குமார சர்மாவால்

தமிழில் இயற்றப்பெற்று,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

[விலை அணா - 1½.]

இது

'வாணீவிலாஸினீ' யென்ற மாதாந்த பத்திரிகையில்

முதலிற் பிரசுரிக்கப்பெற்று, இப்பொழுது

புத்தக ரூபமாய் வெளியிடப்பட்டது.

நிர்மலா

அல்லது

ஒரு பத்திராசிரியரின் விடுமுறை.

முதல் அத்தியாயம்.

அச்சுக்கூடத்தாரோடு பலமுறையும் போர்கொடுத்துக் கடைசியில் "திராவிட தீபிகை" யின் ஸரஸ்வதி பூஜை யிலக்கத்தைப் பண்டிகைக்கு முன்னரே வெளியாக்கினேன். பத்திரிகைகளைச் சந்தாதாரர்களுக்குச் சீக்கிரமாய் அனுப்பிவிடும்படி மானேஜருக்கு நான் திட்டம்பண்ணிக் கொண்டிருக்கையில், பொன்னம்பலம் ஆங்கில வுடை தரித்து 'ஸிகரெட்' ஒன்றைப் பிடித்துக்கொண்டு என் முன் வந்து நின்று, "பெங்களூருக்கு வருகின்றாயா?" என்றான்.

பொன்னம்பலம் எனக்கு இளமை முதல் நண்பன். நாங்களிருவரும் ஒரே வகுப்பிற் படித்து ஒன்றாய் உட்கார்ந்து ஒன்றாய் உழைத்து வந்தோம். உபாத்தியாயர் எங்களை இராம லக்ஷ்மணர்களென் றழைப்பது வழக்கம்.

நாங்கள் பிரவேச (மெற்றிக்யுலேஷன்) பரீக்ஷையில் தேறிக் காலேஜில் வாசிக்கச் சென்னைக்கு வந்தோம். ஆனால் அது முதல் எங்கள் வாழ்க்கையின் வகை வேற்றுமைப்படலாயிற்று. பொன்னம்பலம் ஒவ்வொரு வகையிலும் ஐரோப்பியர்களின் ஆசாரத்தைக் கைப்பற்றத் தொடங்கினான்; நான் அவ்வளவுக் கவ்வளவு என்தாய் மொழியாகிய தமிழ் மொழியில் அன்பு கொள்ளலானேன். எப்பொழுதும் தமிழையே படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டு மிருப்பதாகப் பொன்னம்பலம் என்னைக் கேலி செய்வான்; ஐரோப்பியரைப்

போல் வேஷந் தரிப்பதற்காக நானும் அவனைத் திட்டாமல் விடுகிற தில்லை; சிலகாலங் கழித்துப் பொன்னம்பலம் இங்கிலந்துக்குச் சென்றிருந்து, ஆங்கிலரது ஆசாரங்களைப் பூர்ணமாய்ப் பின்பற்றி 'பாரிஸ்டர்'ராகித் திரும்பிவந்தான். இனி நாங்கள் முன் பாலியத்தில் இருந்ததுபோல் ஈருடம்பும் ஓராவியுமாய் இருக்கவில்லை. பொன்னம்பலம் மாறுதலடைந்துவிட்டான். அவன் எண்ணங்களெல்லாம் முன்போல் எனக்குச் சொல்வதை நிறுத்திவிட்டான். இவ்வளவெல்லாமிருந்தும், எங்களது நட்புக்கு மாத்திரம் யாதொருகுறைவுமில்லை. "பெங்களூருக்கு வருகின்றாயா?" என்று அவன் வினவியதும், நான், 'நீ எப்பொழுது போகின்றாய்?' என்று கேட்டேன்.

"இன்றைக்கே."

"முட்டாளே! நேரம் எங்கே?"

பொன்னம்பலம் தன் கைக் கடியாரத்தைத் திறந்து பார்த்து, 'சிகரெட்'டைப் பற்களின் நடுவில் இருத்திக்கொண்டு, "இப்பொழுது பத்து மணிதான் ஆகிறது. ரெயில் வண்டி மாலை 6-மணிக்குப் புறப்படுகிறது. இன்னும் 8-மணி அதாவது 480 நிமிஷம், கொள்ளை கொள்ளையாய் நேரம் இருக்கிறதே" என்றான்.

அதற்கு நான், "அடே! நீ துரையாய்ப்போய் விட்டாய்; நான் கறுப்பு மனுஷன்; உன்னைப்போல் விரைவாய் வேலைகளை முடிக்க முடியுமா? நான் ஸ்நானம் பண்ணிச் சாப்பிடுவதற்குப் பன்னிரண்டு மணியாகும். பிற்பாடு கொஞ்சம் களைப்பாற"—

"நான்சென்ஸ், அந்தச் சாக்குப் போக்கெல்லாம் நான் கேட்க மாட்டேன்."

"நீ பெங்களூருக்கு போகவேண்டு மென்றிருந்தால், இரண்டு நாளுக்கு முன்னதாகவே ஏன் என்னுடன் சொல்லவில்லை?"

"இன்று காலையில் தானே டாக்டர் பிள்ளை யவர்களிடமிருந்து எனக்கு அழைப்புக்கடிதம் வந்தது."

"என்ன! டாக்டர் பிள்ளையவர்கள்,குடும்ப ஸஹிதமாய்—அவர் மகளுடனுங்கூட, பெங்களூரிலிருக்கிருரா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம், நிச்சயமாய்" என்றுசொல்லிவிட்டுச் சிறிது சிரித்தான் பொன்னம்பலம். டாக்டர் பிள்ளையவர்களின் மகளாகிய கல்வியில் கலைமகளை நிகர்த்த **நிர்மலா** என்பவள் தன் மோகவலையை என் நண்பன்மேல் வீசி அவன் மனத்தைக் கொள்ளை கொண்டிருக்கிருளென்பது யாவருமறிந்த ரகசியம். நான் உடனே, "என்ன கஷ்டம், 6-மணிவரையில் நாம் காத்திருக்க வேண்டுமோ ? அதைவிட இன்னும் முன்னே போகிற வண்டி ஒன்றுமில்லையா?" என்றேன். பொன்னம்பலமும் (நாடகத்தில் வரும் வேஷக்காரனைப்போல் பெரு மூச்செறிந்து கொண்டு) 'இல்லை' என்ருன். நானும்,

"கண்மணியே உன்னைக் காணுமலே கண்களிரண்டுஞ் சோருதே" என்றும்,

"நிமிஷமு தாமஸிம்பனே (నిమిషము తామసింపనే)" என்றும் பாடத் தொடங்கினேன்.

நான் ஒரு பொழுதும் எந்த ஸ்திரீயையாவது கண்டு மோஹித்துக் காதல் கொள்ளாவிடினும், அந்த விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் பரிசயம் மாத்திரம் உண்டு. ஒருநாள் கழித்துப் போவோமென்று பொன்னம்பலத்துடன் சொல்லுவது கூடப் புலிக்குப் *புலால் மறுத்தலைப்பற்றி உபதேசிப்பதை யொக்கு மாதலால், நான் அன்றைய தினமே அவனுடன் செல்ல இசைந்தேன். அவசர அவசரமாய் நான் எடுத்துக்கொள்ளவேண்டிய சாமான்களனைத்தையும் எடுத்துக்கொண்டானதும், நாங்கள் 6-மணி வண்டியில் புறப்பட்டு விட்டோம்.

---

* மாம்சபோஜனம் கூடாதெனல்.

இரண்டாவது அத்தியாயம்.

வண்டி பெங்களூர் ஸ்டேஷனண்டை வந்து நின்றதும், டாக்டர் பிள்ளையவர்கள் தம் மனைவியுடனும் மகளுடனும் மேடையில் (Platform) வந்திருப்பதைக் கண்டேன். ஒரு தமிழ் நாட்டுப்பெண் மேஜோடும் பூட்ஸூம் அணிந்து இப்படிப் பஹிரங்கமாய்ப் புருஷர்களுக்குச் சமமாய் மேடையில் நிற்பதைக் காண என் மனம் சகிக்கவில்லை. நானும் என்காலத்தில் அநேக பிராஹ்ம ஸமாஜ ஸ்திரீகளையும் கிறிஸ்தவ மாதர்களையும் பார்த்திருக்கிறேன்; அவர்களுள் இரண்டொருவர்கூட எனக்கு அறிமுகமுண்டு. ஆகவே இவ்வித நூதன 'நாஜூக்கு'கள் எனக்கு முழுதும் புதியவையல்ல; ஆனபோதிலும், பொன்னம்பலத்துக்கு இனி மனைவியாயும் மாரியாராயும் ஆகப் போகிறவர்களை இந்தக் கோலத்தில் கண்டது என் மனத்தில் நான் எதிர்பாராத துயரத்தை விளைத்தது. பெண்கல்வி விஷயத்தில் நான் மிக்க அனுகூலமாய் இருந்தபோதிலும், மாதர்கள் தொன்று தொட்டுவரும் கட்டுத்திட்டங்களைக் கடந்து இப்படி வெளிப்படுவது எனக்குச் சிறிதேனும் பிடிக்கவேயில்லை. இவ்விஷயத்தைப்பற்றிச் சில நாட்களுக்கு முன்புதான் என் பத்திரிகையில் ஓர் உபந்நியாசம் எழுதிப் பிரசுரித்திருந்தேன். மறுபடியும் அதே விஷயமாய் வேறு உபந்நியாசங்கள் எழுதும்பொருட்டு யோசித்துக்கொண்டிருக்கையிலேயே மேற்சொன்ன காட்சியைக் கண்டேன். இதைக் கண்டவுடனே சில கூரிய கடினச் சொற்கள் என் மனத்திலே ஒன்று சேர்ந்து வெளிப்பட முயன்றும், யாது காரணத்தாலோ சிறிது நேரத்துக்குள் அவை சிதறுண்டு போய்விட்டன.

வண்டியிலிருந்து இறங்கினவுடனே, பொன்னம்பலம் என்னைத் தன் சினேகிதர்களிடம் அழைத்துக்கொண்டு போய்க் காட்டினான். அவ்விதமான மாதர்களுடன் நான் அதுவரையில் கலந்துபேசி யறியாதவனாகையால், அந்த நிலைமையில் இன்ன விதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று தெரியாமல் மேஜையோரமாய் இருந்த சில கொடி செடிகளின் பக்கத்தில் பேதைபோல் நின்றேன்.

பிறகு நிர்மலா என்னிடம் வந்து புன்னகை பூத்து, "சிங்காரம் முதலியாரவாள், தங்கள் பத்திரிகையை நான் தப்பாமல் படித்து வருகிறேன்" என்றுகூறி இன்னும் ஏதோ சொல்லப் போவதுபோல் காணப்பட்டாள்; ஆனால் ஒன்றும் பேசவில்லை. அதற்குள் நிர்மலாவின் தாயார், "திராவிட தீபிகையின் ஸரஸ்வதி பூஜை யிலக்கம் எப்போ வெளியாகும், முதலியாரவாள்?" என்று வினவினாள்.

"ஸரஸ்வதி பூஜை யிலக்கப் பத்திரிகை முன்னமேயே வெளியாய்விட்டதே" என்றேன்.

பிள்ளையவர்களின் பத்நி நிர்மலாவைப் பார்த்து, "உனக்கு வந்ததோ?" என்று கேட்டாள்.

"இன்னும் வரவில்லையே."

"மன்னிக்க வேணும். உங்களுக்கு வரவேண்டிய பத்திரிகை அதற்குள் வந்து சேராது. பத்திரிகை நேற்றுத்தான் வெளியாயிற்று. எல்லாப் பத்திரிகைகளையும் ஒருமிக்க ஒரே நாளில் அனுப்ப முடியாதல்லவா?" என்றேன்.

நிர்மலா: "என்னுடைய பத்திரிகை முதலில் சேலத்துக்குப் போய் அங்கிருந்து இங்கே வருகிறது. இங்கே தங்களிடம் ஒரு பிரதி இல்லையோ?"

நிர்மலைக்குத் "திராவிட தீபிகை" யிலிருந்த சிரத்தையைக் காணவே என் பத்திராதிப மனதுக்கு உண்டான ஆநந்தம் இவ்வளவு அவ்வளவன்று; நான் உடனே, "ஆஹா, என்னிடத்தில் பிரதிகள் இருக்கின்றன. நாளைக்கே உங்களுக்கு ஒன்று அனுப்புகிறேன்" என்றேன்.

"அதற்காக நீங்கள் சிரமப்படவேண்டாம். உங்களுக்கு சௌகரியமானபோது அனுப்பலாம்" என்றாள் நிர்மலா.

பிள்ளையவர்களின் பத்நி, "சிங்காரம் முதலியாரவாள், தாங்கள் தயவுசெய்து நாளை சாயங்காலம் எங்களுடன் தேத்தண்ணீர் சாப்

பிட வரவேணும். மறந்து போகாமல் வருகிறீர்களா?" என்று சொன்னதும், அவர்கள் நாகரிகமாய் விடைபெற்றுச் சென்றார்கள். நானும், "கல்வியின் மகிமையே மகிமை. அதனாலன்றோ கேவலம் நமது தமிழ்நாட்டு மாதர்கள்கூடப் பரபுருஷர்களுடன் தாராளமாயுங்கொஞ் சங்கூடக் கூச்சமில்லாமலும் பேசத் துணிகிறார்கள்" என்று நினைத்துக்கொண்டே நான் இறங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்த விடுதியை நோக்கிச்சென்றேன். அன்றிரவு பிரயாணத்தால் களைத்திருந்த என் உடம்பைப் படுக்கையிலே சாய்த்துக்கொண்டு ஜனசமூக ஆசார விஷயமாய்ப் பலவாறு யோசிக்கலானேன். ஐரோப்பியர் கல்வியுடன் நம்மவர் மேற்கொள்ளும் இப்புதிய மாதிரிகளும் பழக்கங்களும் கடைசியில் என்ன பயனை விளைக்குமோ? ஆனால் என் யோசனைகள் வெகுதூரம் போவதற்கு முன்னமேயே நான் கும்பகர்ணனுக்குச் சீட்டெழுதி விட்டேன்.

மூன்றாவது அத்தியாயம்.

மறுநாள் காலையில் எழுந்திருந்து நான் தேத்தண்ணீர் சாப்பிட்டுக்கொண்டே முதல் நாள் நடந்த சங்கதிகளைப்பற்றி ஒவ்வொன்றாய் யோசிக்கலானேன். ஸ்திரீ-புருஷர்கள் இவ்வாறு கட்டுத்திட்டமின்றித் தாராளமாய்ச் சேர்ந்து பழகுவது ஜனசமூகத்தின் நல்லொழுக்கத்துக்குப் பெருங்கேட்டை விளைவிக்குமென்று என் மனதிற்பட்டது. ஆகையால் இன்று மாலை தேத்தண்ணீர் பானத்துக்குப் போகக்கூடாதென்று நிச்சயித்துக் கொண்டேன். என் நம்பிக்கைக்கு விரோதமாய் நான் ஏன் நடக்கவேண்டும்? "திராவிட தீபிகை"யை யாராவது வேலைக்காரன் மூலமாய்க் கொடுத்தனுப்பிவிடுகிறேன், அல்லது ஒருவேளை பொன்னம்பலமே வந்தாலும் வருவான்; அவன் மூலமாய்க் கொடுத்தனுப்பிவிடலாம் என்றிருந்தேன். ஆனால் அந்தப் பொன்னம்பலம் சுத்த மடையன், அவன் வரவேயில்லை. பாவம் நிர்மலாவை விட்டுவர அவனால் முடியவில்லை. அக்காதலர்களது சரச

சல்லாபங்களை நான் மானஸ கற்பனையால் சித்திரித்து அதைக் கண்டு களிப்படைந்தேன்.

நான் அன்று பகல் போஜனம்பண்ணி யெழுந்தவுடன், இந்தத் தேத்தண்ணீர்ப் பானத்துக்குப் போகாமலிருப்பது நல்லிணக்கத் துக்கு விரோதமாயிருக்கு மென்று எனக்குப் பட்டது. அவர்கள் என்னை யழைத்தபொழுது நான் வருவதாக ஒப்புக்கொண்ட பின்னர்ப் போகாமலிருப்ப தழகன்று; அப்படிப்போவது என் கொள்கைக்கு விரோதமாயிருக்கிறதே யென்றால், அதற்கு முதலிலேயே ஒப்புக்கொண்டிருக்கக் கூடாது. இன்றைக்குப் போய்த்தான் ஆக வேண்டும். இனி இப்படிப்பட்ட விஷயங்களில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஆகவே பகலுக்குமேல் புறப்பட்டுப் போவதென்று தீர்மானித்துக் கொண்டேன். அங்கே போவதற்காக வஸ்திராலங்காரம் பண்ணிக்கொள்வதில் கொஞ்சம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டி யிருந்தது. புருஷர்கள் மாத்திரம் சேர்ந்திருக்கு மிடமானால் உடையைப்பற்றி யிவ்வளவு ஜாக்கிரதை வேண்டியதில்லை. ஆனால் நான் போகப்போகு மிடத்தில் நாகரிகமான ஸ்திரீகளும் இருக்கிற படியால் என் வஸ்திராலங்காரம் வெகு 'நாஜூக்' காகவே இருக்க வேண்டுமல்லவா?

நான் பெங்களூருக்குப் பலமுறையும் போயிருக்கிற படியால் அதன் வீதிகளெல்லாம் எனக்கு நன்றாய்த்தெரியும். நாலுமணி அடிக்கச் சரியாய்ப் பத்து நிமிஷமிருக்கையில் நான் பிள்ளையவர்கள் வீடு போய்ச் சேர்ந்தேன். குறிப்பிட்டிருந்த காலம் நாலுமணி. இவர்கள் இங்க்லீஷ் வழிகளைக் கடைப்பிடித்தவர்க ளானமையால், நான் குறித்த காலத்துக்கு முன்னாடியாய்ச் சென்றால், ஒரு வேளை என்னை நாகரிகமறியாத நாட்டுப் புறத்தானென மதிக்கக்கூடும். ஆகையால் சற்றுநேரம் வெளியே உலாவிவிட்டுச் சரியாய் நாலுமணி 'டிங்' என்று அடித்தவுடன், தற்கால நாகரிக வழக்கப்படி என்பெயர் அச்சிட்ட கடிதத் துண்டொன்றை உள்ளே கொடுத்தனுப்பினேன். உடனே என்னை யனைவரும் மகிழ்வாய் எதிர்கொண்டழைத் துபசரித்தார்கள்.

இன்று நிர்மலா வெகு அழகாய்த் தோன்றினள். நான் ஸ்டேஷனில் பார்த்தபொழுது அவளது கோலம் எனக்குப் பிடிக்கவில்லை. இப்பொழுதோ அவள் 'வெல்வெட்டு'ப் பட்டிற் செய்த சுதேச ஜோடு அணிந்து, புது மாதிரியாய் ஓரத்தில் வெல்வெட்டு வைத்துத் தைத்த மஞ்சள் நிறச்சேலையை இடையில் தரித்து, 'ப்ளான'லால் அமைந்த அழகிய அரைச்சொக்காயால் அங்கத்தை யலங்கரித்து, அடர்ந்த கரிய கூந்தலை அழகாய் வாரிமுடித்த கொண்டையில் மஞ்சள் நிற மலைமலர் பிரகாசிக்க, நிர்மலா லாவண்யத்தில் ரதியையும் பழித்து வெகு சுந்தரமாய் விளங்கினள்.

முதலில் நான் பொன்னம்பலத்தைப் பார்க்கவில்லை. அவன் மாத்திரம் என்னிடம் ஏகாந்தமாய் அகப்பட்டுக்கொண்டால், அவனது காமதேவதையின் செங்கமலக் சேவடியைப்பற்றி வேடிக்கை பண்ணவேண்டுமென்று தீர்மானித்தேன். அவனும் உடனே வந்து சேர்ந்தான். தேத்தண்ணீர் பானம் முடிந்து சற்றுநேரம் சம்பாஷணையிற் செல்லலும், யாவரும் உலாவுவதற்காக ஒன்றாய்ப் புறப்பட்டோம். நான் போய்விட்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுக் கொண்டபொழுது, பிள்ளையவர்களின் பத்நி, "முதலியாரவாள்! தாங்கள் மறுபடியும் நாளைக்குத் தேத்தண்ணீர் பானக வேளைக்கு வந்தால், பிற்பாடு ஒன்றாய்ச் சேர்ந்து வெளியே உலாவப் போகலாம்" என்றாள்.

இந்த வேண்டுகோளை ஒப்புக்கொள்ளாமல் மறுப்பதற்குச் சமயம் இதுதான் என்று என் மனத்தில் பட்டது. அப்படி மறுப்பதற்கு வாஸ்தவமான காரணத்தை அவளுடன் சொல்வதா? வேண்டாமா? ஆனால், 'தாங்கள் வந்தால்' என்று தானே சொன்னாள். அது ஒரு வேண்டுகோளாகுமா?

இவ்வாறு என் மனத்தில் தர்க்கித்துக்கொண்டே அவர்களுக்கு எவ்விதமான விடையும் அளிக்காமல் நான் நிற்கையில், அவர்கள் மாத்திரம் 'போய் வருகிறோம்' என்று வந்தனம் புரிந்து சென்றார்கள்.

———

நான்காவது அத்தியாயம்.

மறுநாள் காலை பத்துமணிக்குப்பொன்னம்பலம் வந்தான். "நிர்ம லாவை விட்டு விட்டு நீ எப்படியப்பா வந்தாய்" என்று நான் கேட்ட தற்கு, அவன் "நீ அவளுக்கு ஒரு பத்திரிகை கொடுத்துவிட்டு வந் தையோ இல்லையோ? அதன் பேரென்ன? திராவிடதர்ப்பணமா,—அல்லது திராவிட தீபிகையா—அதிலேயே அவள் மூழ்கியிருக்கி ருள். அதைக் காணவே எனக்கு எரிச்சல் பற்றிக்கொண்டது. நான் கோபமாய் வந்துவிட்டேன்" என்ருன். இதைக் கேட்ட எனக்குண் டான சந்தோஷத்துக்கு அளவேயில்லை. கல்வியில் நிர்மலாவுக்கு அவ்வளவு ஆசையா? நிர்மலாவே எதைப்பற்றியாவது எழுதும் பக்ஷத் தில் அதைத்தக்கபடி திருத்தி என் பத்திரிகையில் பிரசுரிக்கலா மென்றுகூட எனக்குள் யோசித்தேன். பொன்னம்பலம் அவளைப் பற்றி எவ்வளவோ சொல்லவேண்டுமென்று வைத்துக்கொண்டிருந் தான். இவ்விரு காதலரது இன்பமானது என் மனத்திலும் புநர் - யௌவநோதயத்தை யுண்டாக்கியது. பொன்னம்பலம், "சரி, நான் போய் வருகிறேன். உனக்கு இந்த 'ஜாகை' பிடித்திருக்கிறதா வென்று பார்த்துவிட்டுப் போகவந்தேன். தேநீர்ப் பானகத்தின் போது மறுபடியும் சந்திப்போம். நீயும் வரப்போகிறையோ இல்லை யோ"? என்ருன்.

"தேநீர்ப் பானகத்தின்பொழுதா? எது? இன்றைக்கில்லை. பிள் ளையவர்களின் சம்சாரம் என்னை யழைக்கவில்லையே"

"அவள் தான் அழைத்தாளே, நான் பக்கத்தில் தானே யிரு ந்தேன்?"

"அது எப்படி? 'நீர் வந்தால்' என்று தானே சொன்னுள்?"

"ஆமாம். அது தான் அழைக்கிற மரியாதை. உன்னை அழைக்க வேண்டுமானுல், சாஸ்திரோக்தமாய் உன் இருப்பிடம் தேடிவந்து வெற்றிலை பாக்கு வைக்கவேண்டுமா என்ன? சுத்தப் பழைய சம்பளி யாயிருக்கிறையே."

"நீ அப்படி யெல்லாம் பேசவேண்டியதில்லை. எனக்கோ இத் தண்டை அந்தண்டை நகர்வதற்குக்கூட இன்றைக்கு முடியாது. நான் போகாவிட்டால் நிரம்ப மரியாதைக் குறைவென்று நினைப் பார்களோ? உங்கள் இங்கிலீஷ் நாகரீக மரியாதைகளும் அதன் 'சிங்கினாதங்களும்' எனக்கு நன்றாய்த் தெரியாது."

'கேட்பானேன்? நிரம்ப மரியாதைக் குறைசசல் தான்."

இதைக் கேட்டதும், எனக்கு என்மேலேயே அதிக கோபம் உண்டாயிற்று. நான் அப்பொழுதே பிள்ளையவர்களின் சம்சாரத்து டன் "எனக்கு வேலையிருப்பதால், நாளைக்கு வர என்னலாகாது" என்று சொல்லி விட்டிருக்கலாமே. அதை விட்டுவிட்டு அவள் என்னைச் சரியானபடி அழைத்தாளா இல்லையா என்பதைப்பற்றி வீணே தர்க்கித்துக்கொண்டிருந்து விட்டேன். அதனால் தான் இவ்வளவு தொல்லையும்.

"ஓ, அப்படிப் பிரமாதமான மரியாதைக் குறைச்சல் ஒன்று மில்லையப்பா. அதைப்பற்றி என் அவ்வளவு கவலை? அடுத்த சமயம் சந்திக்கும்பொழுது, மன்னிக்க வேண்டுமென்று கேட்டால் போகிறது. ஆனால் நீ என் வரக்கூடாது? வா அப்பா, நீ நல்ல பிள்ளையாச்சே" என்றான் சிரித்துக்கொண்டே பொன்னம்பலம்.

நான்போக முடியாமைக்குச்சரியான காரணத்தைப் பொன்னம் பலத்துக் கப்பொழுது சொல்ல எனக்கிஷ்டமில்லை. 'கொஞ்சம் முக்கியமான வேலையிருக்கிறது' என்று மாத்திரம் சொன்னேன்.

"அந்த முக்கியமான வேலையை நாளைக்குப் பார்த்துக்கொள்ள லாம். இன்றைக்கு நீ வந்து தான் தீரவேண்டும். எப்படியாவது வரும்படி பார்" என்று சொல்லிப் பொன்னம்பலம் போய்விட்டான். நானும் எனக்குள்ளேயே 'நீ என்ன வேணுமானாலும் சொல்லு, நான் வரமாட்டேன்' என்று சொல்லிக்கொண்டேன்; ஆனால் நேரமாக ஆக எனக்கே அங்கே தனிமையாயிருக்கப் பிடிக்கவில்லை. அன்றியும் திராவிட தீபிகையின் அந்த இலக்கத்தைப்பற்றி நிர்மலாவின்

அபிப்பிராயம் என்ன வென்றறிய ஒரு பக்கம் ஆவலாயிருந்தது. முக்கியமாய், 'உத்தமஸ்திரீகளின் ஒழுக்கம்' என்பதைப்பற்றி அவள் என்ன நினைக்கின்ருளென அறியவிரும்பினேன். அவ்வுபந்யாசத்தைப்படித்த பிறகு அவளுடைய நோக்கம் என்னமாதிரியாயிருக்குமென்பதை நான் அறியவேண்டுமென்றிருந்தபடியால், அவர்கள் வீட்டுக்குப் போவதென்று தீர்மானித்தேன்.

நான்போய்ச் சேர்ந்தபொழுது ட்ராயிங்க் ரூமி(drawing room)ல் ஒருவருமில்லை. சற்றுக்கழித்து நிர்மலா வந்து, புன்னகை தவழ என்னை வந்தனம் செய்து, "உங்களைப் பார்த்ததில் எனக்கு மெத்த சந்தோஷம். நீங்கள் வரமாட்டீர்களென்றே எண்ணியிருந்தோம். அப்பா, அம்மா, பொன்னம்பல முதலியார் எல்லாரும் தோட்டத்தைப் பார்த்து வருவதற்காகப் போயிருக்கிருர்கள். நீங்கள் வரமாட்டீர்களென்று சொன்ஞர் பொன்னம்பல முதலியார். உங்களுக்கு வேலை தலைக்கு மேலிருந்ததாம். ஏதாவது புதிய உபந்யாசமாயிருக்கலாம்" என்ருள்.

"ஆமாம்—இல்லை, நான் நினைத்தேன், வேலையிருப்பதால்"

"சரி தெரிஞ்சுது. ஒன்று கேட்கலாமா நான் உங்களை, சிங்காரம் முதலியாரவாள்? திராவிட தீபிகைக்காகத் தாங்கள் ஒரு நாளைக்கு எத்தனைமணி நேரம் செலவழிக்கிறீர்கள்?"

"என்னுடைய நேரமெல்லாம் செலவழிக்கிறேன். நானிருப்பதே அதன்பொருட்டுத் தானே"

"அது வல்லவோ சுகம். அப்படியே நானும் இரவும் பகலும் இலக்கிய ஆராய்ச்சியிலேயே செலவழிக்கமாட்டேஞ என்று ஆவல் அடித்துக்கொள்ளுகிறது. ஆனல் அப்படி உங்கள் எதிரில் சொல்வது ஸாஹஸமல்லவா?"

"என்"?

நீங்கள் எழுதியிருக்கும் "உத்தமஸ்திரீகளின் ஒழுக்கம்" என்னும் உபந்யாஸத்தில் இல்லறம் நடாத்துவதே ஸ்திரீகளின் சிறந்த

கடமையென்றும், இல்லறத்திலுள்ள உற்றார் உறவினருடன் கலந்து வாழ்ந்து, தன் சுகத்தைப் பாராட்டாமல், தரித்திரர் ஆதுரர் முதலியவர்களது கஷ்டங்களை நிவர்த்தித்தலே ஸ்திரீயாய்ப் பிறந்ததற்குப் பரம புருஷார்த்தமென்றும் நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்கள் போல் தோன்றுகிறது.”

“அப்பொழுது நீங்கள் அந்த உபந்யாஸத்தைப் படித்திருக்க வேண்டும்.”

“படித்திருக்வேண்டுமோ! அதற்காக்ஷேபணை யென்ன? அந்தப் பத்திரிகை முழுவதும் படித்து முடித்து விட்டேனே. நேற்றிரவு அதைப் படித்துக்கொண்டே படுக்கையில் தூங்கிவிட்டேன். மறுபடியும் நான் விழித்துக்கொண்டபொழுது, மெழுகுவத்தி முழுவதும் எரிந்துபோய்க் கடைசியில் அணைவதன் முன் அதிக பிரகாசமாய் ஜ்வலித்ததைக் கண்டு மிகவும் பயந்துபோய் விட்டேன்”

“அப்படியா! நல்ல வேளையாய் ஒன்றும் நெருப்புப் பற்றிக்கொள்ளவில்லை யல்லவா?”

“நான் அவ்வாறு அதைப் படித்துக்கொண்டிருக்கையிலேயே என் கட்டிலின் படுதாக்கள் நெருப்புப் பற்றிக்கொண்டு நானும் எரிந்துபோயிருந்தால், பல வர்த்தமான பத்திரிகைகளிலும் அப்பொழுது பிரசுரமாகும் என் மரணசமாசாரமானது உங்களுடைய “திராவிடதீபிகை” க்கு நேர்த்தியான விளம்பரமாய் அமைந்து உபகரித்திருக்கு மல்லவா?”

முதலில் இதற்குத் தக்கபடி பதில் சொல்ல எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. ஒரு விதமான உபமானம் என்மனத்தில் உற்பத்தியாய்க்கொண்டிருந்தது. அவள் பிரஸ்தாபித்த மெழுக்கு வத்தியின் மெழுக்கைப் போலவே அவள் லலிதமாயும் சுகுமாரமாயும், அதன் பிரகாசத்தைப்போலவே அவள் பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தாள் என்று சொல்லக்கருதினேன். பிறகு நான் யாதொரு ருத்துமின்றிக் கொல்லென நகைத்துக் கடைசியாக, “தமிழ் இல

க்கியத்தில் உங்களுக்கு அவ்வளவு ஆசையிருக்கும் போது நீங்களே ஏன் சொந்தமாய் ஒன்றும் எழுதுவதில்லை?" என்றேன்.

"நான் எழுதினல், யார் வாசிப்பார்கள்? முதலாவது அதை யார் அச்சிடுவார்கள்?"

நிர்மலை இரகசியமாய் எழுதிவந்தாளென்ற சந்தேகம் மாத்திரம் எனக்கு உண்டு. ஆனல் அதை நேரில் கேட்க எனக்குத் தைரியமில்லை. பிறகு மாதாந்தப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் 'சிறுகதை' களின் விஷயமாய் எங்கள் சம்பாஷணை திரும்பியது. பிரதிமாதமும் ஒரு சிறுகதை பிரசுரிக்கிறதென்கிற இப்போதைய வழக்கத்தில், இவ்வகையான நேர்த்தியான கதைகள் கிடைப்பது அபூர்வமாயிருப்பதால், சிற்சில சமயங்களில் பத்திராதிபர்களுக்கு அதிக கஷ்டம் உண்டாகிறதென்று நான் சொன்னேன். அதற்கு நிர்மலா—"என்னுடைய நண்பர் ஒருவர் சிறுகதைகள் எழுதிவருகிறூர். அவர் எழுதிய கதை ஒன்று என்னிடத்தில் இப்போதிருக்கிறது. அதைப்பார்கிறீர்களா?" என்றுள்.

இப்படிப்பட்ட ஆபத்து வருமென்று முந்தியே நான் அறிந்திருப்பேனுயின், 'சிறுகதை' களின் பிரஸ்தாபமே செய்திருக்கமாட்டேன். பத்திராதிப யந்திரத்தை ஆட்டிக்கொண்டு வருகையில், ஆரம்ப கிரந்தகர்த்தாக்கள் எழுதும் அநேக கதைகளை நான் படிக்கும்படி நேரிடுவது சகஜம். ஆனல் இப்பொழுது ஒரு மாத 'ரஜா'வின் பேரிலல்லவோ நான் பெங்களூருக்கு வந்திருக்கிறேன். இப்பொழுதும் இந்த உபத்திரவமா? எப்படியானுலும், தப்பித்துக்கொள்ள வழியில்லாமையால் "நீங்கள் எதைக்கொடுத்தாலும் பார்க்கிறேன்." என்றேன்.

"அதைப்பற்றித் தங்கள் உண்மையான அபிப்பிராயத்தை எனக்குச் சொல்லவேண்டும்"

"ஆஹா, அப்படியே ஆகட்டும்"

"எழுதியவர் என் நண்பர் என்ற காரணத்தால், தாங்கள் ஒன்றையும் ஒளிக்கப்படாது."

"அதைக் கேட்கவேண்டுமென்று நீங்கள் உண்மையாய் ஆவல் கொண்டிருக்கும் பட்சத்தில், என் வாஸ்தவமான அபிப்பிராயத்தையே சொல்லுகிறேன்."

நிர்மலா உடனே அந்தக் கதையைக் கொண்டுவரச் சென்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம், நல்ல அழகிய 'ரூல்' போட்ட வெள்ளைக் காகிதத்திலே இடதுபக்கப்பாதியில் ஒன்றும் எழுதாது மற்றப்பாதியில் மாத்திரம் நேர்த்தியாய் எழுதி ஓரத்தில் செம்பட்டால் குத்தித் தைத்திருந்த ஒரு கட்டுக் கையெழுத்துப் பிரதியை என்கையில் கொடுத்தாள். அதை முதலில் பார்த்தவுடனே "நூதன கிரந்தகர்த்தா போலும்" என்றேன்.

"ஆமாம்; அது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நூதனமாய் எழுதத் தொடங்குவோர்கள் தாங்கள் எழுதுவதைச் சாதாரணமாய் எப்பொழுதும் அதிக சிரமப்பட்டு ஜாக்கிரதையாய் எழுதி முடிப்பார்கள். பேர்போன ஆசிரியர்களின் கையெழுத்து சாதாரணமாய்த் தெளிவாயிராது" என்று சொல்லிக்கொண்டே, பத்திராதிபர்கள் வழக்கமாய்ப் பார்ப்பதுபோல், எழுதியவர் பெயரைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுக் கடைசி பக்கத்தைத்தள்ளிப்பார்த்தேன். அங்கே யாதொரு பேரையுங் காணோம். கதையில் வரும் காதலர் விஷத்தால் தம் உயிரை மாய்த்துக்கொண்டார்களா? வென்று அந்தப் பக்கத்தை ஏற இறங்கப்பார்த்தேன், ஏனெனில் நூதன ஆசிரியர்கள் அநேகமாகத் தங்கள் கதாநாயகரான காதலர்களை ஜீவனோடிருக்கவிடுவதில்லை. ஆனால் இக்கதையில் காதலர்கள் ஜீவித்திருக்கும்படி கற்பனை செய்திருந்தமையால், நான் அதில் அதிக ஆசை கொள்ளலானேன். ஒருவேளை நிர்மலாவே அதை எழுதியவளா யிருக்கக்கூடாதா வென்ற சம்சயமும் கொண்டேன். கூச்சமுள்ள ஆசிரியர் பலரும் தம் ஆரம்ப முயற்சிகளை ஒரு நண்பர் எழுதினதாகச் சொல்லி வெளியிடுவதுண்டு. "இதை நான் இன்று வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோய், அதைபற்றி எனக்குத் தோன்றும் அபிப்பிராயத்தை உங்களுக்கு நாளைக்குத் தெரிவிக்கிறேன்" என்

றேன். அதை நிர்மலா எழுதியிருக்கலாமென்றே அநேகமாய்த்தென் பட்டது. என் அபிப்பிராயத்தை யெடுத்துச் சொல்வதற்கு வேண்டிய பதங்கள் ஏற்கனவே என்னிடத்தில் ஸித்தமாயிருந்தன. நண்பர்கள் இயற்றும் நூல்களைப்பற்றி அபிப்பிராயம் கொடுப்பதென்கிற இந்த வேலை எனக்கு நித்தியகர்மமாய்ப் போய்விட்டதல்லவா? அவ்வபிப்பிராயத்தைச் சொல்வதற்கு வேண்டிய பதங்கள் என்னவோ ஸித்தமாகவே யிருந்தன. அவற்றைத் தக்க விடங்களில் அமைக்க வேண்டியதுதான் காரியம்; எப்படியெனில், "சில பாகங்களில் படிப்பதற்கு மிகவும்நேர்த்தியாயிருக்கிறது" "பழக்கத்தின்மேல் நம் நண்பர் சிறந்த ஆசிரியராகலாம்" என்றவாறு.

பிறகு ஒவ்வொருவராய்க் குடும்பத்திலுள்ளவர்க ளெல்லாரும் உள்ளே வந்தார்கள். தேநீர்ப் பானம் ஆனதும், நாங்கள் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தோம். வெளியிற் போகும் பிரஸ்தாபம் அப்புறம் ஒன்றும் நடக்கவில்லை.

ஐந்தாம் அத்தியாயம்.

வீட்டுக்குப் போனவுடன் கதையைப் படித்தேன். படித்ததும் நான் பெரியதொரு பிசகு செய்துவிட்டதாய் அறிந்தேன். அது நான் முதலில் நினைத்தபடி நூதனமாய் எழுதத் தலைப்பட்ட ஒருவரின் மங்கை முயற்சியாய் இராமல், பழகித்தேர்ந்த ஆசிரியரின் வாக்கிய ரசனையென விளங்கியது. அதன் நடை கம்பீரமாயும், முடுக்காயு மிருந்தது. அன்றியும், அது நிர்மலாவால் எழுதப்படவில்லை யென்றும் கண்டுகொண்டேன். அவ்வளவுகூடத் தெரியாவிட்டால், இத்தனைநாள் நான் பத்திராதிபராயிருந்ததற்குப் பயன்தான் என்ன? அதை எழுதினவரின் பெயரை ஊகித்தறிவதிலும் எனக்குக் கஷ்டமுண்டாகவில்லை. அவர் கனகசபைபிள்ளை. அவரை நான் எப்பொழுதும் பார்த்ததில்லை. அவர் கும்பகோணத்தில் இருப்பதாகமாத்திரம் கேள்வியுற்றிருக்கிறேன். அவரது புஸ்தகங்களில் அநேகம் நான்

படித்திருக்கிறேன். ஆங்கிலம் கற்ற வாலிப வயதிள்ள தமிழாசிரியருட் சிறந்தவர்களில் அவரும் ஒருவர். ஆயினும், அவர் எழுதுவதில் பல குறைகள் உள. அவற்றிற்கு அவரது பால்யமே காரணமாதலால், காலக்கிரமத்தில் அவை சீரடைந்து சிறந்து விளங்கும்.

மறுநாள் அந்நூலைப்பற்றி நிர்மலாவினிடம் புகழ்ந்து பேசினேன். இரண்டோரிடங்களில் சில குறைவுகளை எடுத்துக் காட்டினேனென்றாலும், மொத்தத்தில் அதைக் கொண்டாடினேன். அப்போது நிர்மலாவை நோக்கி "ஆசிரியர் அதிக வாலிபரோ"? என்று வினவினேன்.

"ஆமாம், என்னை விடக் கொஞ்சம் பெரியவர்."

"அவர் உங்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பரென்று நினைக்கிறேன்."

"ஆமாம்."

இது எனக்குப் பிடிக்கவில்லை. ஒரு வாலிபப் பெண்ணுக்கும் வாலிபப் புருஷனுக்கும் "நெருங்கிய நட்பு" ஏனிருக்கவேண்டும்?"

"அவர் எழுதியவற்றுள் இன்னும் இரண்டொரு பிரபந்தங்கள் கிடைக்குமா?" என்று கேட்டேன்.

"ஏன்? அவை உங்களுக்கு அவ்வளவு மனோஹரமாய் இருக்கின்றனவா?"

"மனோஹரமாய்த்தான் இறக்கிறதென்று சொல்லவேண்டும்."

"சரி. இதைத் தவிர வேறே இரண்டொரு புஸ்தகங்கள் இருக்கிறதா என்று பார்க்கிறேன்."

"அவரது புஸ்தகங்கள் உங்களிடத்தில் அதிகமாயிருக்கிறதோ."

"ஆமாம், என்னிடம் அநேகம் இருக்கிறது. அவர் புதிய பிரபந்தம் ஒன்று எழுதி முடிக்கும் போதெல்லாம், அதைப் படிக்க எனக்கு அனுப்புகிறார்."

இவர்கள் இவ்வளவு அந்யோந்யமாயிருப்பது சற்றேனும் சரி யல்லவென்று நான் நினைத்து "ஆகவே அவர் எழுதுவதையெல்லாம் நீங்கள் முக்கியமாய்ப் படித்துவருகிறீர்கள் போலும்" என்று வெளிப்படையாய்ச் சொன்னேன்.

"அப்படி யில்லாமலிருந்தாலும், அவர் எழுதும் பிரபந்தங்களை நான் தான் முதலில் படிக்கிறேன். அவருடைய பிரபந்தங்களை என்னைக்காட்டிலும் அதிகமாக வேறொருவரும் புகழமாட்டார்களென்று எண்ணுகிறேன்"

"அவர் பெயரை நான் கேட்கலாமோ?"

நிர்மலா சற்று ஆலோசித்துப் பிறகு, "கனகஸபை பிள்ளை" என்று சொன்னாள். அப்படிச் சொன்னபோது அவளது புருவம் நாணத்தாற் சிவந்தது.

நான் பொன்னம்பலத்தைப்பற்றி விசனப்பட்டேன்.

பிறகு நாங்கள் கனகஸபைபிள்ளையவர்கள் எழுதி வெளிப்படுத்திய பிரபந்தங்களின் குணகுணங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினோம். அப்பொழுது, அவர் நூதனமாய் வெளியிட்ட "பல்லவராணி" என்ற கதை விமர்சனத்தின பொருட்டு எங்களிடம் வந்திருக்கிறதென்று சொன்னேன்.

இதற்குப் பிறகு பலநாளும் கனகஸபைபிள்ளையவர்களின் பிரபந்தங்களைப்பற்றி நிர்மலாவுடன் நான் வெகு தாராளமாய்த் தர்க்கிக்கலானேன். அவள் அவரைக் கேவலம் கடவுளைப்போலவே கருதிப் பூஜித்தாள். ஆனால் அது முதல், இந்த மனுஷ்யனைப்பற்றி என் உள்ளத்தில் இன்னதென்று சொல்லமுடியாத ஒருவித துவேஷம் என்ன காரணத்தினாலோ ஜனித்தது.

ஆறும் அத்தியாயம்.

நிர்மலாவைத் தனக்குப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொடுக்க வேண்டுமென்று அவளது தாய்தந்தைகளைப் பொன்னம்பலம் இது

வரையிலும் கேட்கவில்லை. அவன் அப்படி கேட்கும்போது அவனை யே அவளுக்குத்தக்க புருஷனென்று அங்கீகரிப்பார்களென்பது நிச்சயம். பொன்னம்பலம் டாக்டர் பிள்ளையவர்களுக்கு மாப்பிள்ளை யாக்வேண்டுமென்று எவ்வளவு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தானே, அவ்வளவு டாக்டர் பிள்ளையவர்களும் பொன்னம்பலத்திற்கு மாமனு ராகவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தாரென ! நான் உறுதியாய் நம்பினேன். இந்த விஷயம் இந்தச் சிலநாட்களுக்குள் எனக்குத் தெளிவாய் விளங்கலாயிற்று; ஆனால் கனகஸபையின் மேற்சொல் லிய சங்கதி எனக்கு மிக்க மனச்சஞ்சலத்தை யுண்டாக்கியது. இந்த அத்யந்த ஸ்நேஹம் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை. இந்த சங்கதியை நான் பின்வருமாறு கருதலாயினேன். பொன்னம்பலத் துக்கும் நிர்மலாவுக்கும் கல்யாணம் நடக்கப்போகிறது. நிர்மலா தமிழ் இலக்கியத்தில் மிக்க ஆசைகொண்டவள். பொன்னம்பலமோ அதன் பேரைக்கேட்ட மாத்திரத்திலேயே சீறுவான். நடுவில் மிகச் சிறந்த ஆசிரியனாகிய கனகஸபை உலகத்திலுள்ள மாதர்களுக்குள்ளே நிர் மலாவையே இலக்கிய விஷயத்தில் தனக்கு உற்ற ஆப்த மித்திரி யாகக் கொண்டிருக்கிறான். நிர்மலாவும் அவனிடத்தில் அதிகஆசை வைத்திருந்தாள். இஃதோர் எங்கும் யாரும் அறியாத புதுமையான விதைபோல் விளங்கியது—அதினின்றும் எவ்விதமான விருக்ஷம் வளருமோ அதைச் சொல்ல யாராலாகும்.?

இந்தக்காரியத்தை இவ்வாறு செல்லவிட எனக்கிஷ்டமில்லை. என் நண்பனது இல்லற வாழ்க்கையை யடைக்கும் முள்ளை யெடுத் தெறியப் பார்ப்பேன். கனக ஸபையைப் பூஜிக்கும்பொருட்டு நிர்மலா தன் உள்ளத்தில் நிர்மித்துப் பரிசுத்தமாக வைத்திருக்கும் ஆல யத்தை யென் கண்டனமாகிய வஜ்ராயுதத்தால் தகர்த்துப் பொடி யாக்குவேன். கனகஸபையைவிட அதிக கெட்டிக்காரர்களான கிர ந்த கர்த்தர்கள் நூதன வித்வான்களுக்குள் எத்தனையோபேர் இருக் கிறார்களென்று காட்டுவேன். கனகஸபையின் பிரபந்தங்களிலுள்ள சொற்குற்றம் பொருட் குற்றங்களை நான் நிர்த்தாக்ஷிண்யமாய் எடுத் துக்காட்டுவேன். முற்கால தற்கால மேற்றிசை இலக்கியங்களை

யெல்லாம் ஆராய்ந்து, அவற்றிலுள்ள கருத்துக்களை கனகஸபை யின் நூல்களிலு மிருக்கின்றனவென்று காட்டுவேன். பூர்வப்பிரபந் தங்களிலிருந்தும் கனகஸபையின் பிரபந்தங்களினின்றும் ஒரே அபி ப்ராயமுள்ள வசனங்களை நேருக்குநேராய் எடுத்து அச்சிட்டு, அவன் இவ்வுலகத்திலே பெருந்திருடனென்று நிரூபித்து, இவ்வாறு அடிக் கடி இப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்லிச்சொல்லி, நிர்மலா வண ங்கிவந்த தெய்வம் வைக்கோலை உள்ளே அடைத்துச்செய்த வெறும் களிமண் பொம்மையினும் மேலான தன்றெனும் நிச்சயத்தை அவள் உள்ளத்தில் உண்டுபண்ணுவேன். திராவிட தீபிகைக்காக நான் எல் லாவற்றையும் அர்ப்பணஞ்செய்துவிட்டேன். எனது கண்டன தண் டாயுதமென்றால் மஹாகவிகளும் கிரந்தகர்த்தர்களும் அச்சத்தால் நடுங்குவார்கள். ஆகவே இப்பொழுது இந்தத் தண்டத்தின் உதவி யால் ஒரு மித்திர ஸஹாயத்தைச் செய்து முடிப்பேன். ஆனால் இப் படிச்செய்வது என்னுடைய பத்திராதிப தர்மத்துக்கு விரோதமாய் யிராதாவென்ற ஸந்தேஹம் ஒன்று கிளம்பிற்று. ஆனால் அதை என் மனப்போக்கின் துணையைக்கொண்டு அடக்கி மனச்சாக்ஷியைச் சுல பமாய்த் தூங்கும்படிச் செய்துவிட்டேன். இவ்விதத்தீர்மானத்துடன் "பல்லவராணி" யைச் சின்ன பின்னமாக்கி அதைப்பற்றி மகா தீக்ஷணமாகப் பிரதிகூல விமர்சனம் (review) ஒன்று தீட்டி என் பத் திரிகையின் அக்டோபர்மாதத்து இலக்கத்தில் வெளியாகுமாறு சென்னைக்கு விடுத்தேன். யுக்தமான்காலத்தில் 'ப்ரூப்' தாள்கள் வந் தன. அவற்றின் பற்பல விடங்களில் கண்டனத்தின் கூர்மையை முன்னிலும் அதிக தீவிரமாக்கினேன். அன்று பகல் பொன்னம் பலம் என்னிடம் வந்தான். என்மேஜையின் மேலிருந்த 'பல்லவ ராணி'யைப் பார்த்து அதைக் கையில் எடுத்தான். நான் அவசரமாய் "அதைத் தொடாதே, அதைத்தொடாதே, அது சாதாரணமான வெறும் தமிழ்ப்புஸ்தகம்" என்றேன்.

"நீ இந்தஉபயோகமற்ற சுவடியின் விஷயமாய்த் தானே சென்ற சிலநாளாய் உன் பிராணனை விட்டுக்கொண்டு ஒரு வாரமாய் எங் களைப் பார்க்கக்கூட வராமலிருந்துவிட்டாய். நான் இங்கே வரும்

போதெல்லாம் இந்தப் புஸ்தகததின் விஷயமாகவே எழுதிக்கொண்டிருக்கிறாய். ஆகையால் இதை எடுத்துக்கொண்டு போய்விடவே இப்போவந்தேன்."

"அதை நான் விமர்சனம் செய்துகொண்டிருந்தேன். இப்பொழுது அது முடிந்துபோய்விட்டபடியால், நீ மஹாராஜனாக எடுத்துக் கொண்டு போகலாம்."

"விமர்சனம் முடிந்து விட்டதா?"

"ஆகா ; இப்பொழுதுதான் 'ப்ரூப்' களைத் திருத்தி அனுப்பினேன்."

பொன்னம்பலம் தமிழ் இலக்கியத்திவ் இல்வளவு ஆவலாய் இருப்பதைக்கண்டு எனக்குள், "என்ன சம்பவித்திருக்கக்கூடும்?" என்று யோசிக்கலாயினேன்.

பொன்னம்பலம் என்னைப்பார்த்துச் சிரிக்கத் தலைப்பட்டான். "என்னடா அது?" என்றேன்.

"என்னைப்பற்றி ஒரு ரஹஸ்யம் உனக்குச் சொல்லப் போகிறேன். இந்த விமர்சனம் உன் பத்திரிகையில் வெளியாகும் வரையில், அப்படிச் செய்வதற்காகத் தான் காத்துக் கொண்டிருந்தேன்"

அதைக் கேட்கவும் நான் ஆச்சரியமுற்று, "பல்லவராணி' யின் விமர்சனமா? அதற்கும் உன்னைப்பற்றிய ரஹஸ்யத்துக்கும் யாது சம்பந்தம்?"

"மிக நெருங்கின சம்பந்தமே. நான்தான் கனகஸபை பிள்ளை."

அதைக் கேட்டதும் எனக்கு ஆகாசத்திலிருந்து குபீரென்று கீழே விழுந்தது போலாயிற்று. "நீயா !!" என்றேன்.

"ஆமாம்—நான்தான்—உனக்குத் தெரியவில்லையா? பொன் என்றால் கனகம், அம்பலம் என்றால் சபை."

"நீயா !" என்று மீண்டும் ஆச்சரியத்துடன் சொல்லிக் கொண்டே வேலைக்காரனை அழைக்க ஒரு மணியடித்தேன். அவன் வந்த

தும், தந்திச் சீட்டு ஒன்று கொண்டுவரச் சொன்னேன். பொன்னம்பலம் தான் இங்கிலாந்தி லிருந்தபொழுது பிரிட்டிஷ் ம்யூஸியத்திற்குப்போய் அங்கிருந்த செந்தமிழ் நூல்களை யெல்லாம் அதிக சிரத்தையாய்ப் படித்ததாகவும், பிறகு ஸ்வதந்திரமாய் நூல் இயற்ற முயன்று பயின்ற தாகவும், தன் முதல் நாவலின் விமர்சனம் திராவிட தீபிகையில் வெளிப்படும் வரையில் இதை எனக்குச் சொல்லாமல் தாமசித்ததற்குக் காரணம், அவ்விஷயம் எனக்கு முந்தியே தெரிந்து போய்விட்டால் சிநேக பக்ஷபாதத்தால் அதன் விமர்சனம் பாதிக்கப்படும் என்கிற எண்ணமே யென்றும் சொன்னான்.

சேவகன் தந்திச்சீட்டைக் கொணர்ந்தான். நான் தபால் மூலமாய் அனுப்பிய 'ப்ரூப்' களை அச்சிடக்கூடாதென்றும் அதற்குப் பதிலாக வேறொரு விஷயம் பிரசுரிக்க வேண்டுமென்றும், மானேஜருக்குத் தந்தி யடித்து விட்டேன்.

முற்றிற்று.

மஹேச குமார சர்மா இயற்றிய
மற்ற நூல்கள்.

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்.

இதில் விவேகாநந்த ஸ்வாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் திவ்ய சரித்திரமும் மதுரகதாமிருதமும் மெய்யுபதேசங்கள் உள்ள உபதேச ரத்னமாலையும் அடங்கி யிருக்கின்றன. பரமஹம்ஸரது திருவுருவப்படமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அணு 12.

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்.

இதில் ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின் பிறப்புமுதல் நிர்யாண மீறுக வுள்ள சரித்திர விசேஷமும் சிகாகோ, லண்டன், இலங்கை, யாழ்பாணம், ராமேசுவரம், ராமநாதபுரம், 'கும்பகோணம், சென்னை, கல்கத்தா முதலிய விடங்களிற் செய்த அரிய பிரசங்கங்களும், ஸ்வாமிகள் மாக்ஸ் மூல்லரைப்பற்றியும் பண்டித தாய்ஸனைப் பற்றியும் (Prof. Duessen) எழுதிய கடிதங்களும், சென்னை வாசிகளுக்கும் கேஷத்திரிமகாராஜாவுக்கும் வரைந்தவிடுத்த உத்வேககரமான ஸ்ரீமுகங்களும், ஸர்வார்ஹமத ஸமரஸ விளக்கம் முதலிய வேறு பல உபந்யாஸரத்நங்களும் எளிய தமிழ் நாடையில் விளக்கப் பட்டுள்ளன. ஸ்வாமிகளின் படத்துடன் காலிகோ பைண்ட் செய்தது. விலை ரூபா 1—4—0.

ஆநந்தமடம்.

இது பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயரால் வங்காளி பாஷையில் இயற்றப்பட்ட நவரஸாலங்காரங்களும் செறிந்த தேசபக்தி புகட்டும் நாவலின் மொழிபெயர்ப்பு. சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீயுத ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய முகவுரையுடன் கூடியது. தேசபக்த ஆசுகவியாகிய ஸ்ரீயுத ஸி. சுப்ரஹ்மண்ய பாரதியார் இயற்றிய பாடல்கள் நிரம்பியது. 'வந்தே மாதரம்' என்ற தேச பக்தி பஞ்சாக்ஷரி மந்திரத்தின் மகிமையையும் தேசோத்தாரணத்திற்காக ஸந்தாந ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த ஆநந்த மடத்து ஸந்யாஸிகள் செய்த முயற்சி விசேஷங்களையும் விரிவாய்விளக்கிக் கூறுவது. ஹிந்துமதத்தின் உண்மையியல்பையும் வைஷ்ணவ பக்தி ரஹஸ்யத்தையும் விசேஷமாய் எடுத்துரைப்பது. இது ஹிந்தி மராடி குஜராத்தி தெலுங்கு கன்னடம் முதலிய இந்தியபாஷைகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும், மொழி பெயர்க்கப்பெற்ற பெருமையையுடையது. கதை படிப்பதற்கு வெகு ரஸமாயிருக்கும். ஒவ்வொரு தேசபக்தரும் அவசியம் வாங்கிப்படிக்க வேண்டிய நூல். விலை ரூபா 1.

எல்லோரும் வாசியுங்கள்.

அற்புதமான நாவல். ஸ்வாரஸ்யமான கதை.

ஆநந்தமடம்.

இதில் தேசபக்தர்களான ஸந்தாண ஸம்பிரதாயத்து ஸந்யாஸிகள் தேசோத்தாரணத்திற்காகச் செய்த அருஞ்செயல்களும், தேசபக்தி பஞ்சாக்ஷரியாகிய வந்தேமாதர மந்திர மகிமையும், சாந்தியென்னும் பெண் கல்விகற்று தேகப்பயிற்சி செய்து தன் கணவனுடன்சேர்ந்து தேசம் உஜ்ஜீவிக்கும்பொருட்டுச்செய்த வீரச்செயல்களும், அவள்காட்டிய தன்மறுப்பும் அபூர்வகற்பனுலங்காரங்களுடன் அற்புதமாய் வர்ணிக்கப்பட்டுள்ளன. **இப்படிப்பட்ட நாவல் தமிழில் இதுவரையில் எழுதப்பட்டதேயில்லை.** இது இந்தியாவிலுள்ள பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு எல்லாவகுப்பாராலும் மிக்க ஆவலுடன் வாசிக்கப்படுகின்றது.

இது வங்காளபாஷையிலிருந்து மஹேசகுமார சர்மாவால் தமிழில் அழகாய் மொழிபெயர்க்கப்பெற்று ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் எழுதிய பாயிரத்துடனும் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதியாரியற்றிய தேசபக்திப்பாடல்களுடனும் 28 பவுன் கிரௌன் கிளேஸ் கடிதத்தில் 280 பக்கம் கொண்ட நேர்த்தியான புஸ்தகமாக அச்சிடப்பெற்றிருக்கின்றது. ஒவ்வொருதேசாபிமானியும் தவறாமல் வாங்கிப் படிக்கத்தக்கது.

விலை அணா 12.

விலாஸம்: தி. ராமசந்திர & கம்பெனி,

2-218, தம்புசெட்டிதெரு, சென்னை.